**சேருவில பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 05 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஜுன் 17 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 12 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து சேருவில பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ரூபா 1,809,465 தொகை பெறுமதியான காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஐந்தொகைக்கு எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் நான்கு நிலையான வைப்புக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வட்டி வருமானமாகிய ரூபா 598,030 தொகையினை வருமானக் கூற்றிற்கு எடுக்கப்படாமையால் நடைமுறை ஆண்டிற்கான மிகை அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) நடைமுறை ஆண்டின் போது இரத்துச் செய்யப்பட்ட ஆறு காசோலைகளின் பெறுமதியாகிய ரூபா 76,000 தொகையினை காசேட்டில் வரவு வைக்கப்பட்டமையால் காசேட்டில் 2015 திசெம்பர் மாத இறுதியில் காணப்பட்ட மீதி ரூபா 76,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மூன்று ஒப்பந்த வேலைகள் தொடர்பாக தடுத்து வைத்தல் பணம் ரூபா 608,336 தொகை தொடர்பான ஒப்பந்த வேலை கோவைகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

வழங்கப்பட்டு 06 மாதங்களை மிகைத்துள்ள கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 51,950 தொகை பெறுமதியான காசோலைகள் தொடர்பாக மாகாண நிதி விதி 237 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,642,265 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,561,011 ஆகும். முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ஏனைய மேலதிக பெறுவனவுகளின் அதிகரித்தல் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,126,254 இனால் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாகவிருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரியும் வரியும் | 25 | 2 | 23 |
| குத்தகை | 2,986 | 4,206 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 636 | 661 | - |
| ஏனைய வருமானங்கள் | 20,885 | 18,818 | 2,067 |

#### 2.2.2 கடை வாடகை

2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான குத்தகை வருமானம் ரூபா 230,306 இனை 2016 மே 25 ஆந் திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

#### 2.2.3 முத்திரைக் கட்டணம்

கிழக்கு மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக பெற வேண்டிய தொகையினை இனங்காண்பதற்கு மற்றும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஆயுள்வேத மருத்துவ நிலையம்

(அ) பிரதேச சபைக் கட்டிடத்தில் அமைந்துள்ள பிரதேச சபையின் ஆயுள்வேத மத்திய நிலையத்தின் புள்ளி விபரங்களின் பிரகாரம், 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது 1200 நோயாளிகளுக்கு மருத்துவம் செய்யப்பட்டிருந்த போதிலும் இங்கு கடமையாற்றிய ஆயுள்வேத வைத்தியர் விளகி சென்ற பின்னர் இந்த மருத்துவ நிலையம் 2014 ஜூன் மாதம் முதல் மூடப்பட்டிருந்தமையால் பிரதேச சபை அதிகாரப் பிரதேச மக்களுக்கு சேவை வழங்கி அவர்களின் சுகாதார நிலைமையை

மேம்படுத்தும் பிரதேச சபையின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) சுமார் இரண்டு வருட காலம் ஆயுள்வேத மருத்துவ நிலையம் மூடப்பட்டு காணப்பட்டமையால் அங்கு காணப்பட்ட ரூபா 23,314 தொகை பெறுமதியான 34 மருந்து வகைகள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

(அ) 2015 ஆண்டு தொடர்பாக 2016 ஜனவரி 31 திகதி நடத்தப்பட்ட பொருட்கள் கணிப்பீட்டு சபை அறிக்கையின் பிரகாரம் கணிப்பீட்டு சபையினால் இனங்காணப்பட் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய மற்றும் அழிக்கக் கூடிய பண்டங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விதப்புரைகளை செயற்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) காணிகளின் சட்ட ரீதியான உரிமை சபைக்கு உரித்தாக்கப்படாமல் சபையினால் 2015 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 112,446,047 இற்கான விளையாட்டு திடல்கள், பொதுக் கிணறுகள், சனசமூக நிலையங்கள், நீர்த் தொட்டிகள், தகனசாலைகள் மற்றும் பொதுச் சந்தைகள் ஆகியன நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இக் காணிகளின் சட்ட ரீதியான உரிமை சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சி மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சுச் செயலாளரின் 1990 அக்தோபர் 10 திகதிய இலக்கம் 41/90 கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 6 மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்பட வேண்டும். எனினும் சபைக்குச் சொந்தமான 10 வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ஈ) நிதிப் பிரமாணங்கள் 750 இன் பிரகாரம் அனைத்து அரசாங்க வாகனங்களுக்கும் இலங்கை அரசாங்க இலாஞ்சனை பதியப்பட வேண்டும். எனினும் பிரதேச சபைக்குச் சொந்தமான 23 வாகனங்களுக்காக இலங்கை அரச இலாஞ்சனை பதியப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிப் பிரமாணங்கள் 1645 இன் பிரகாரம் வாகனங்கள் பொறுப்புச் சொல்லக் கூடிய ஒரு உத்தியோகத்தரினால் பொறுப்பில் காணப்பட வேண்டியதுடன் அந்த உத்தியோகத்தரின் சம்பவக் குறிப்பேடுகள் பேணப்பட வேண்டுமெனினும் சபை வாகனங்கள் தொடர்பாக சம்பவக் குறிப்பேடுகளில் வாகனங்கள் பற்றிய விபரங்கள், எரியும் எரிபொருளின் அளவு, வாகனங்களின் ஆயுதங்கள் மற்றும் மேலதிக உபகரணங்கள் பற்றிய விபரங்களை உட்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) சபைக்குச் சொந்தமான ஓட்ட நிலையில் காணப்படும் 13 வாகனங்களுக்காக மீளாய்வாண்டிற்காக வருமான அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(எ) 2015 ஜுலை 14 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 04/2015 இன் பிரகாரம் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் இருந்து காப்புறுதி பாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் சபையினால் காப்புறுதி முகவர் ஒருவரின் மூலம் 09 வாகனங்களின் காப்புறுதி பாதுகாப்பு பெறப்பட்டிருந்தது.

**3.3 வீதிகளில் பெயர் பலகைகள் பொருத்துதல்**

30 வீதிப் பெயர் பலகைகள் தயாரித்து கொங்கிரீட் போட்டு பொருத்துவதற்காக ரூபா 405,000 தொகையொன்று 2014 திசெம்பர் 23 ஆம் திகதி சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 8 ஆம் அத்தியாயம் 9.1 இன் பிரகாரம் ரூபா 250,000 தொகையை விட மிகைக்கும் ஒப்பந்த வேலைகளுக்காக உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட வேண்டும். எனினும், இந்த வீதிப் பெயர் பலகைகள் பொருத்தும் வேலைக்காக பிரதேச சபையினால் வழங்குனருடன் உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இந்த பெயர் பலகைகளை பொருத்துவதற்காக கூறுவிலை கோரப்படல் 2014 திசெம்பர் 22 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கூறுவிலை அழைக்கப்பட்ட தினத்திற்கு அடுத்த நாளாகிய 2014 திசெம்பர் 23 ஆம் திகதி பெயர் பலகைகள் பொருத்தப்படுதல் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக செலவுகளை சான்றுபடுத்தி வழங்குனருக்கு ரூபா 405,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) தயாரிக்கப்பட்டிருந்த 10 பெயர் பலகைகள் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், பெயர் பலகைகள் பொருத்துவதற்கு முன்னர் பணம் செலுத்தியமையினால் மீதியாகவுள்ள 20 பெயர் பலகைகளை 2016 மே 25 ஆந் திகதி வரை பொருத்தப்படாமல் பிரதேச சபை வளவில் காணக் கூடியதாக இருந்தது.

### 3.4 LED அறிவித்தல் பலகை தயாரித்தல்

நகர அலங்கரிப்பு மற்றும் சபைக்கு வருமானம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பிரதேச சபையினால் அறிவித்தல் விளம்பரத்திற்காக LED அறிவித்தல் பலகையொன்று பொருத்துவதற்கு சபை நிதியத்தில் இருந்து ரூபா 938,000 தொகை 2014 மார்ச் 10 திகதி செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் 08 ஆம் அத்தியாயத்தில் 9.1(அ) பந்தியின் பிரகாரம் ரூபா 250,000 இனை மிகைக்கும் பண்டங்கள் அல்லது சேவைகள் ஒப்பந்தங்களுக்காக உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட வேண்டுமெனினும் இந்த அறிவித்தல் பலகையை பொருத்துவதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இவ் அறிவித்தல் பலகையை பெற்றுக் கொள்ளும் போது பயன்படுத்த வேண்டிய ஒளியின் அளவு மற்றும் விளம்பரப்படுத்தக் கூடிய அறிவித்தலின் எண்ணிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் தேவையான அளவை விட குறைவான கொள்ளளவினை கொண்ட பெயர் பலகை ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக பயன்படுத்தக் கூடிய ஒளியின் அளவை விட மிகையான ஒளி பயன்படுத்தப்பட்டதால் திரையின் மீது ஒரே தடவையில் பல நிகழ்ச்சித் திட்டங்கள் திறக்கப்பட்டதனால் 2014 மார்ச் 17 ஆம் திகதி அறிவித்தல் பலகை செயற்படாது காணப்பட்டது.

(இ) அறிவித்தல் பலகை பொருத்தப்பட்ட பின்னர் வழங்குனர்களிடம் பொறுப்புக்கள் எவை என இனங்காணாமலும், பொறுப்புச் சான்றிதழ் ஒன்று பெற்றுக்கொள்ளாமையின் காரணமாக பொருத்தப்பட்டு 07 நாட்களில் செயலிழந்திருந்த போதிலும், சபையினால் அதனை பழுதுபார்க்க முடியாமையால் இதற்காக செலவிடப்பட்ட பணம் பலனற்றதொன்றாக மாறியுள்ளது.

### 3.5 ஒப்பந்த நிருவாகம்

#### 3.5.1 பிரதேச சபைக் கட்டிடம் நிர்மாணித்தல்

புரநெகும செயற்திட்டத்தின் கீழ் பிரதேச சபையின் அலுவலகத்திற்காக இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 27,709,341 தொகை பெறுமதியான 6 மாத காலத்தில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அடிப்படையில் 2012 திசெம்பர் 17 திகதி ஒப்பந்த உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்தது. 2016 மே 25 ஆந்

திகதி தமேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) கட்டிடத்தின் பொறியியல் மதிப்பீட்டில் காட்டப்பட்டிருந்த விவரக் குறிப்பின் பிரகாரம் சபைக் கட்டிடத்தின் கதவுகள் மற்றும் யன்னல்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்காததுடன் அவை மதிப்பீட்டு விவரக் குறிப்புக்களின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக சான்றுபடுத்தி ரூபா 1,842,680 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கட்டிடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 105 கண்ணாடி யன்னல்களுக்காக பொறியியல் மதிப்பீட்டின் பிரகாரம் காப்பு கவிகை 140 மீட்டர்களுக்காக ரூபா 630,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த காப்பு கவிகை போடப்பட்டிருக்காத போதிலும் அவை சபையின் பாதுகாப்பிற்கு பிரச்சினை ஒன்றாகியுள்ளது.

(இ) இங்கு மலசலகூட முறைமையின் நீர்குழாய்கள் மூலம் நீர் ஒழுகுவதன் காரணமாக நீர் வழிந்தோடுவதனால் சபைக் கட்டிடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இரண்டு மலசலகூடங்களும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது.

(ஈ) 2005 இன் 03 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 111 ஆம் பகுதியின் பிரகாரம் (2007 இன் 13 ஆம் இலக்க மற்றும் 18 ஆம் இலக்கங்களைக் கொண்ட நிதி திருத்திய சட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் கீழ்) ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்த ரூபா 30,065,945 தொகை தொடர்பாக நிர்மாண வேலை சான்றிதழ் நிதிய வரி (CIGFL) ஆக ரூபா 75,165 தொகை தடுத்து வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்க அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.5.2 பிரதேச சபையின் கராஜ் நிர்மாண வேலை

சபைக்குத் தேவையான வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக 2015 மே 18 திகதி சபை நிதியத்தில் இருந்து ரூபா 493,250 தொகை செலவிடப்பட்டு கராஜ் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 08 ஆவது அத்தியாயத்தின் 9.1(ஆ) பந்தியின் பிரகாரம் ரூபா 250,000 இனை மிகைக்கும் பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பான ஒப்பந்தங்களுக்காக உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட வேண்டுமெனினும், இந்த கராஜ் நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கராஜ் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுபடுத்தப்பட்டு பணம் செலுத்தியிருந்த போதிலும் இதனை நிர்மாணிக்கும் போது உண்மையாக பயன்படுத்தியிருந்த பண்டங்கள் மற்றும் செலுத்தியிருந்த சிட்டையை இணக்கஞ் செய்யப்பட்ட போது ரூபா 35,150 தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்ததென 2016 மே மாதம் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

| விடயம் | சிட்டையில் செலுத்தியிருந்த எண்ணிக்கை | உள்ளவாறு பயன்படுத்தியிருந்த எண்ணிக்கை | பற்றாக் குறை | அலகின் விலை | மேலதிகமாக செலுத்தியிருந்த தொகை |
|---|---|---|---|---|---|
| | | | | ரூபா. | ரூபா. |
| 2'' GI குழாய் | 20 | 15 | 5 | 4,150 | 20,750 |
| 1'' GI குழாய் | 24 | 20 | 4 | 1,850 | 7,400 |
| குழாய்களை | - | - | - | - | 7,000 |

வலைப்பதற்காக

-------------

மிகையாக செலுத்தியிருந்த
தொகை

35,150
======

(இ) கராஜ் நிர்மாணிப்பதற்காக வழங்குனருக்கு முழுத் தொகையும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நியமத்திற்கு உட்படாத கலவை ஒன்றின் மூலம் மற்றும் குறைந்த கனத்தில் கொங்கிரீட் போடப்பட்டிருந்தமையால் அங்கு தரைக்கு போடப்பட்டிருந்த கொங்கிரீட் உடைத்தலுக்கு ஆளாகியிருந்தது. அதே போல் கூரை உரிய முறையில் வேயப்படாமையால் கூரைக்கு போடப்பட்டிருந்த தகரங்கள் வெடிப்படைந்ததுடன், வாகனங்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைத்திருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்**

பிரதேச சபைக்குச் சொந்தமான ரூபா 675,000 தொகை பெறுமதியான டபள் கப் வண்டி ஒன்றறை வருட காலம் முதல் முன் பக்க பாளம் பழுதுபார்த்தல் மற்றும் டயர் மாற்றப்பட வேண்டியதால் அந்த வாகனங்களை பயன்படுத்தாமல் துருப்பிடித்து காணப்பட்டதுடன் ரூபா 1,000,000 பெறுமதியான மகேந்திரா கெப் டீசல் பம் குறைபாடு காரணமாக மூன்று ஆண்டுகளிற்கு மேலாக விளைவற்றிருந்தது.

**3.7 சுற்றாடல் சிக்கல்கள்**

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கள்**

1980 இன் 56 மற்றும் 2000 இன் 53 இலக்கங் கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் 23(அ) பிரிவின் பிரகாரம் சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 13 வர்த்தகங்களுக்காக அவ் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமல் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**4. மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடப் பதவியணி |
|---|---|---|---|
| நிறைவேற்று நிலை | 02 | 01 | 01 |
| இரண்டாம் நிலை | 15 | 10 | 05 |
| மூன்றாம் நிலை | 22 | 18 | 04 |
| மொத்தம் | 39 | 29 | 10 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஜூன் மாதம் முதல் வெற்றிடமாகக் காணப்படும் பிரதேச சபையின் ஆயுள்வேத மருத்துவர் பதவிக்காக தகைமையுடைய நபர் ஒருவரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நூலகக் காப்பாளர், மின்சார தொழிநுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், வருமானப் பரிசோதகர் ஆகிய பதவிகளில் 02 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான காலப்பகுதியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) மனித வள முகாமைத்துவம்